

T. M. காதர் பாக்ஷா.

உ

வேலுமயிலுந் துணை.

# நூதன கிராம்போன்

# சங்கீதகீர்த்தனும்ருதம்

(நான்காம் பாகம்)

10-இன்ச் D/S. தமிழ் ரிகார்டுகள்

கிரீன் லேபில்.

சங்கீத வித்வான்

## S. V. சுப்பையபாகவதர் பாடியது.

பிளேட் நே, 2072 { முருகன் திருமால் மருகன் / பாலசுப்ரமணிய வடிவேலா

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

முருகன் திருமால் மருகன் பெருமை— அந்த
முக்கண்ணனுக்கு மில்லை தணிகாசல முரு

அநுபல்லவி.

இருபோதுமன தவரைக் கண்டால்
இலகும்படி களிபொங்கி— வளருந்திரு தணிகாசல முரு

சரணம்.

புன்னகை மேவும் வதனவிம்பத்தின்
பொருந்து மந்த ஹாசன்—செழும்
பொன்னொளிர் மேவும் பன்னிரு கரங்களும்
பொருந்துங் கிருபாவேசன்
சன்னதியில் வந்து தங்கு மூலாசன்
தவஞ் செய்யுந் தொண்டர்க்கருள் முருகேசன்
உன்னைக் கண்டால் வில காதவர் நேசம்
உலகத்தினி லெவருக்கினை எவருற்றவர் தணிகாசல முரு

கார்த்திகைப் பெண்க ளருவரும்கூடி
களிக்க வரும் பாலன் எங்கும்
காணக் கிடையாத மாதவரை வேரறக்
கண்டவடி வேலன்
ஆர்த்தகை சூரரை அன்றே சொல்லும் காலன்
ஆடுமயில் மீது ஆரோகணியுங் கோலன்
கோர்த்த கடம்ப மயிலேறுந் திரிசூலன்
குகனற்றவ ரகமுற்றிட புகழ்பெற்றிடுந் தணிகாசல மு
குட்டியே பிரமனை முன் சிறையிலிட்ட
கோகனக னற்ற வேதன்
குற்றமில்லாமலே சிவனுக் குபதேசம்
செய்த குரு நாதன்
எட்டுத் திசையும் புகழும் நன்னீதன்
ஏந்திழை தெய்வானை மகிழும் விநோதன்
மட்டிலடாணு ராகப்ர சங்கீதன்
மதுரைத்தமிழ்.முனிவர்க்கருள் சிவசுப்ரமணியன்பெயர் முரு

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பால சுப்பிரமணிய வடிவேலன் அடிவள்ளியே
உனக்கு மனு கூலன்
வக்கனைச் சொல்லுக்கிளியே
பக்குவ முரைக்கும் குண
சீலன் பரி பாலன் பா
உனக்குத் தகுந்த மணவாளன் உன்னை
உற்றனைக்கும் பன்னிருகை தோளன்
உத்தமன வித்துரமி உத்தமன ஜனித்தமதி
கூபன் மறை பாகன் பா
வாசவர்க்கும் கேசவர்க்கு முருகன் புன
வள்ளியே யுனக்கு மனு கூலன்
வக்கனைச் சொலுக்கிளியே பக்குவ முரைக்குங்குண
சீலன் பரி பாலன் பா

## பிளேட் நெ, 2490 சனித்தோடி தேவே 1-2.

இராகம்-ஹரிகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

சனி தோடி தேவே ஓ மனஸா

அநுபல்லவி.

கனிகரமுதோ கனிகரமிடி சிர
காலமு ஸூக மனுபவிம்ப வேகமே ச

சரணம்.

பதிலுரப்ரோசே பட்டாதி காருணி
பரமார்த்த மத விவிஷ்டாரு ஸாரிணி
த்யுதி நிர்ஜித ஸதஸம்ப ராரிணி
துரீண த்யாகராஜ ஹ்ருச்சாரிணி ச

## தமிழ் ரிகார்டு.

## ஆர்மோனியம்

## உறையூர் T. M. காதர்பாக்ஷா

பாடியது.

### பிளேட் நெ, 1738 ஆண்டவனே அடியேன் 1-2 பாகம்.

பல்லவி.

ஆண்டவனே அடியேன் பாபம்
பொருத்தருள் றஹுமானே ஆ

அநுபல்லவி.

பட்டபாட்டை பொருப்புதே தருணம்
திட்டமாய் சமரச மாய் நிறைந்தவென் ஆ

சரணம்.

எட்டாதவைப்போல நாமமதுதான்
எற்ற பராபரனே
மட்டிலடங்காத வல்லவா யென்பாப
மகற்றி கிருபை தாரும் ஆ

அற்பமாஞ் சஞ்சலத்தை செற்பத்திலமைத்து
விருப்பமாகிய உருப்புகளமைத்து
கற்பனைப்படிக்கே எக்காலும் நடத்தி
காத்து வளர்ப்பவனே ஆ

ஆவணக்காப்பக

பல்லவி சரணத் தொடர்

ஆண்டவனே அடியேன் பாபம்
பொருத்தருள் நகுமானே ஆ

அற்பமாஞ் சஞ்சலத்தை கெற்பத்தில் வைத்து
விருப்பமாகிய உருப்புக ளமைத்து
கற்பனைப்படியே உணவுயிர் கொடுத்து
காத்துவளர்ப்பவனும் நீயே ஆ

சொற்பமரர் துனியா இசைவழிப் படுத்தி
துலங்கிய பலபல பகுத்தறிவுடனே
கற்பனைப்படியே என்னாளும் நடத்தியுன்
விதிப்படி மௌனத்தாள
எழுப்ப வல்லமைக்கொண்ட ஆ

பிளேட் நெ, 1751 { ஆலவாய் மதுராபுரி
சிங்காரவேலா

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆலவாழ் மதுராபுரி நகர் அம்பிகா யெனையாதரி

அநுபல்லவி.

அம்பிகா யெனையாதரி அருள்புரிந்து பராபரி ஆ

தொகையறா.

சீலமாய் அறுபத்து நான்கு திருவிளையாடல்
செய்த சொக்கேசர் பாரி
தேவரோடு மாதுடன் செம்மைபெறவே
திருக்கருணை யளித்தநாரி

ஷை அநுபல்லவி மூடுகு.

காலைமாலை சதா நீயே கதி காவலித் தருணாகரி
காவலித் தருணாகரி பாஸ்கரனிஷ்ட சோதரி ஆ

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சிங்காரவேலா ஜெகமலர் பாதா
தெய்வகுஞ்சரி மகிழ் தேவா மூவா
திருவருள் தருவாய் ஜெகம்புகழ் குகனே சி

அநுபல்லவி.

தினவனந்தனை நாடி குறமகள் மனங் கூடி
திருவிளை யாடல்செய்த திருமால் மருகாயனை
தினமே சிரமதிற் கரங்குவி சேவடி வணங்கினேனையா சி

## வைலெட் லேபில் ரிகார்ட்.

# கோயம்புத்தூர். தாயி பாடியது.

## பிளேட் நே, 1845 படமுடியா தினித்துயரம்.

விருத்தம். இராகம்-ஆனந்தபைரவி.

படமுடியா தினித்துயரம் படமுடியாதரசே!
பட்டதெல்லாம் போதுமிந்தப் பயர்தீர்த்திப் பொழுதென்
னுடலுயிரா தியவெல்லாம் நீ யெடுத்துக் கொண்டுன்
னுடனுயிரா தியவெல்லா முவந்தெனக்கே யளிப்பாய்
விடலூறு சிற்றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுன்மணியே!
யென் குருமணியே! மாணிக்கமணியே! நடன சிகாமணியே!
யென் குருமணியே யென் நவமணியே!
ஞான நன்மணியே பொன்மணியே நடராஜமணியே!

# மதராஸ் மிஸ்டர் A. S. ராசப்பா

## பாடியது.

பிளேட் நே, 2837 { கிரிமலே க்ஷேத்திரத்தின் பெருமை / மயில்வாகன மேறிவா முருகா }

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கிரிமலே க்ஷேத்திரத்தின் பெருமை—எப்
பாரிலு மறியோம் தீர்த்தத் தருமை—ஸ்நானம்
கோரிட நகுலேஸ்வரன் கிரிமுகமாக நேரில்
காக்ஷி கொடுத்த மாக்ஷி கி

நீரிலு மொருபாக முப்புத் தண்ணீர்—ஸ்வாமி
நீதியால் மற்றொரு பக்கம் பன்னீர்—என
நினைத்து அருந்துவோர்க்கு வினைப்பயன்களைத் தீர்க்கும்
மூர்த்தி மேசவை நேர்த்தி கி

நகுலாம்பிகை மகிழும் திருவே—எழில்
ஞான வடிவேலணியும் தருவே—எந்த
நாளுமே யுனைத் தொழுமென் ஏழைக்கிரங்கி யிவ்வேளே
அருளே பரம் பொருளே கி

தெய்வங்களில் நீயே சக்ரவர்த்தி-மூன்று
தமிழுக்குறிய அபி விர்த்தி—இந்த
தெள்ளமுதென கார்மேகம் உள்ளமதிலே உரையும்
தேவே கவி கோவே கி

இராகம்-ஹரிகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

மயில் வாகன மேறி வா முருகா
மாசிலாத தேசுலாவும் மயில்
மகுத்துவ மிலகு ஜெகத்தில் நடமிடும் மயில்
மதுரித மிலகிய வரமருள் செயவொரு மயில்
வாது சூது ஏதென் மீது மயில்
நீதி போத வேதநாயகனே மயில்
வந்தின்பந் தந்தெனை யாண்டிடு மயில்

அநுபல்லவி.

குயில்மொழி யுமையாள்
குமர ஷண் முகனே
கொஞ்சம் தயவு செய்வாய்
தஞ்சம் தஞ்சம் நானுந்தன் மயில்

சரணம்.

அரணகிரி பரவும் ஆபத் சகாயனே
அடிமை யெனக்கோர் வரம்
அருள்கார்த்தி கேயனே மயில்

சரவண பவசிவ சமராபுரி யீசனே
சங்கர லிங்கன் பங்கில்
தங்கும் முரு கேசனே மயில்

## பிளாக் லேபில் ரிகார்ட்.

## கள்ள பார்ட்.

# R. நடராஜ ஆச்சாரி பாடியது.

பிளேட் நெ, 2200 { ராமசாமி தூதனுனடா
கண்டுகோண்டேனே

### ராமாயணம்.

இராகம்-காட்டை-தாளம்-ஆதி.

பல்லவி.

ராமசாமி தூதனானடா ராவணு என்பேர்
அனுமான் பாரடா
அடே அடே அட ராவணு ரா
அடட அடட டடட ரா
அடடே அடடே ரா

அநுபல்லவி.

தீமை புரியும் துஷ்ட நிக்ரஹ திவ்யகுண தீரனனே ரா
அடடே அடடே ராவணு ரா

சரணம்.

கஞ்சமல ருமையாள் வாழும்
கயிலேயும் விட்டு அடராவணனே
கருணையால் மானிடவடிவந் தாங்கி
கையில் வில்லேந்தி
சுரர் முனிவர்கள் துன்பந் தீர
தோற்றி யருள் தீர வீர ரா

இராகம்-பைரவி-திஸ்ரதாளம்.

பல்லவி.

கண்டுகொண்டேனே சீதாதேவி என் தாயைக் க

அநுபல்லவி.

கொண்ட களிதீர்ந்து கோரிக்கை முடித்து
தொண்டு செய்யு முன்றன் தோற்றம்போல் நானின்று க

சரணம்.

ஸ்ரீராமர் நொந்திடும் சித்தம்களி கூற
நானனுமான் சென்று நல்லசெய்தி செப்பி
தாமதமின்றியே தக்கசேனை கொண்டு
தாக்கியே யரக்கரை தக்ஷணம் தாலைய மீட்க க

பிளேட் நெ, 2246 {பல் ஜோக்குத்தோனே
ஜிட்டான் ஜிட்டான்}

## கள்ளப்பார்ட்.

பல் ஜோக்கு தோனே போதுந்தி
பல் பலே பலே பல்
ஜோக்குத் தோனே போதுந்தி
றயிட்டு றயிட்டுந்தி தினுக்கு தினுக்குந்தி
சொகுசு சொகுசுண்டி நாக்கு நாக்குண்டி
அன்ன ஜோக்கு தோனே போதுந்தி
பல் ஜோக் பலே ஜோக் பலே பல் பலே
ஜோக்கு தோனே போதுந்தி ஜோக்கு

தானி முக்குல ஜோக்கு தானி தெலுப்புறுளு ஜோக்கு
றானி தளுக்கு குலுக்கு ஜோக்கு எர்ரபில்ல ஜோக்கு
பொட்டி பில்லஜோக்கு எந்த லல்லாண்டு ஜோக்கு
அடவிலோ நேனுமூட்டை இச்சின ஜோக்கு
ஜோக்கு ஜோக்கு
ஜோக்குதோனே போதுந்தி
சின்னபில்லா எர்ரபில்லா ராமக்கா பொம்மக்கா
திம்மக்கா நாமக்கா ராமக்கா எர்ரடி பில்லா
இளகென்ன பில்லா ஜோ

சின்னன்ன பொன்னன்ன ராமன்ன நீயன்ன
அன்ன அன்ன பெத்தென்ன அன்ன ராமன்ன
அன்ன நீயன்ன அன்ன சின்னன்ன ஆசை யன்ன
ராமன்ன நீயன்ன ஜோக்குதோனே போதுந்தி
சின்னதானி வேஷமுதானி நேனு சேசின மோசமு
என் கண்ணே ஐயோ எ அல்லோ ஜோ

## தெம்மாங்கு.

ஜிட்டான் ஜிட்டான் ஜிட்டான் ஜிலுக்குதான்
ஜீவரத்னம் மடிமேலே ஒரு குலுக்குத்தான்
அந்தமதன் கொந்துகணை வந்துமையல் தந்ததினால் ஜி

ஆனந்தந்தான் நீயும் வந்தாய்
உந்தன் மேலே எண்ணந்தான் ஜி

ஆசைப்பட்டு என்னை கட்டிக்க
நீ கெட்டிக்காரி யல்லவோ
அந்தமதன் கணைவந்து கழிந்திட
சிந்தை மகிழ்ந்திட வந்தனம் தந்தேன் ஜி

## ஆரியகான சபா

# M-S-ராமச்சந்திர அய்யர் பாடியது

பிளேட் நே, 5349 {வாவா மயூரா / மூட்டைப்பூச்சியும் கோசுவும்}

## காமிக் பாட்டு.

பல்லவி.

வா வா மயூரா
மரகத மயில் வீரா வா

அநுபல்லவி.

தாதா உனதருள் சரவண பவகுகனே
தேவாதி தேவா மூவரில் மூவா
சேவலங் கொடியவா வா

சரணம்.

குன்றுதோறும் நடமாடிய முருகா
கோகுலப்ருந்தாவன மாலின் மருகா
என் காதிலே நலம் சொலிப்புகழ் தருகா
எழில் கதிர்வடிவேலா முனம் நீ வருகா
எம்பிரான் தேசிகா
தம்பிரானே ஷண்முகா
நம்பினேன் கார்குகா

அம்பாள் சுசீலா கற்பகா
ஆலகால முண்ட வையன்
பாலகா சீலமுடன் காரும் மெய்யன்
பணிந்தேன் துணிந்தேன்
குணிந்தேன் முனைந்தேன்
குமர குரு பரனே
குகனே பன்னிரு கரனே வா

---

பல்லவி.

மூட்டைப் பூச்சியும்
கொசுவும் ஈயும்
மொய்க்குதே சுரி சுரீ லென்றிதோ
தைக்குதே ஜோராய் மூ

அநுபல்லவி.

கோட்டை அகழி
கொத்தளம் தாண்டி
கேட்டு தாண்டி
எந்தன் பாட்டை வேண்டி மூ

சரணம்.

ஒரு பக்கம் மூட்டுப்பூச்சி
மறு பக்கம் கொசுவும் பாச்சி
இருக்குதே சத்தமிட்டு சீச்சீ
ஏகுதே காட்டாமல் மூச்சி மூ

## கிரீன் லேபில் ரிக்கார்ட்.

பெஜவாடா கபிலவாய்

## ராமநாத சாஸ்திரி பாடியது.

பிளேட் நே, 2844 { ஏதிகதி நாக்கு
ஏதகேந்த பிரிதி }

இராகம்-அசாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏதி கதி நாகு ரங்கா ரங்கா ஏ

அநுபல்லவி.

கருணு பரண காவக தேவா
ரங்கா ரங்கா ரங்கா ஸ்ரீரங்கா ஏ

சரணம்.

தல்லிவி தன்ட்றிவி தைவமு
ஸூடகான தயசிதே தாரிலேக
நீ தாரிசிசேரன் தாமஸமு லேக
ஸ்ரீ மனோ நாதா ஏ

இராகம்-கல்யாணி-தாளம்-பத்யம்.

எதி கொந்த்த ப்ரிதிசியை னுன்னனே மாயெ
ந்யாயம்பு பாலிம்ப ஸாயுடம்ம
நிஜமு தெல்லக ஜேஸிநீ வெம்த பொங்கின
படிநம்முவா ருண்ட வலதடம்ம
பின்ன நாடசு கோமெல நன்னோரிங்கின வாரு
ப்ண்டி திலியாரனும்ட ரம்ம
இந்த யாடுட நீகே ஹிதம்ம சுகானி
நீவெர மிம்பு மாடகே வெரவனம்ம
பூசி வசி யிம்துநா மனஸைன கனுமு
கோடி பார்தலு வடின நானேடி வெம்ட
செலிகி யீகலு ஷம்புவ சிம்ப்பு சும்மு
ப்ரதின பட்டிதினி யிதெசி பாதமான ஏ

## மதுரை மிஸ். A. சுந்தரம்பாடியது

பிளேட் நெ, 2864 { தானே வருகிறரோ / நேற்றுராத்திரிபோன

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தானே வருகிறரோ நான் வரவோ
அவரைத் தையலே கேட்டுவா போடி தா

அநுபல்லவி.

தேனூர் மலர் சோலைசூழ் வேளூர் முத்துக்குமாரர்
திருமயிலின்மேற் பவனிவரு மயிலேற்தும் வீரர் தா

சரணம்.

காம பூதம் வந்து தேடி திரியுதடி
கடிமலர்களை வாரிச் சொரியுதடி
ஆமடி கணவன்மேல் ஆசை வருகுதடி
அந்தரங்கமெல்லாம் யாருக்குந் தெரியுமடி — தா

இராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நேற்று ராத்திரிபோன — பெண் வீடு இதுவல்ல
நிலவரமாக — உற்றுப் பாரும் — நே

அநுபல்லவி.

இருட்டு வேளையில் — நீர் திருட்டுத்தனமாய்
செல்லும் திருட்டெல்லாம் — வெளியாச்சு
மிரட்டாதேயும் ஸாமி — திருட்டுபாலும்
சீனிதேனு பாகு — கல்கண்டு பிரட்டி
வாயிலூட்டியப் பெண் — வீடந்த வீதியில் — நே

## பிளாக் லேபில் ரிகார்ட்.

# T-G-ஜெகந்நாத நாயுடு பாடியது.

பிளேட் நே, 2303 { மாதர்களுக்கெல்லாம் சிலாக்யம்
இந்த மனமோஹன சுந்தரம்

பல்லவி.

மாதர்களுக்கெல்லாம் — யோக்யம்
துங்க — மிகுந்த
மங்கையருக் கெல்லாம் — சிலாக்யம்
நமக் — குண்டாகும்
செய்கையா லணைந்தாலா — ரோக்கியம் — மா

அநுபல்லவி.

சந்ததமும் அவ — ளிங்கிதமும் மணி
சுந்தரமும் அதி — விந்தையதாகவே
பெருத்த இவளிரு — தனத்தை எனதிட
கரத்தா லொருதரம் — அணைந்து மார்பிடை

சிர்தை யதும்பி ததும்பி சுணங்கு படர்ந் திரு
சேலோ யிருவிழி வேலோ புருவங்கள்
ஆலோ அடிவயிர் பாலோ இவள் மொழி மா

இராகம்-மோகனம்-திஸ்ர-தாளம்.

பல்லவி.

இந்த மன மோஹன்
சுந்தர வதி யாளை
எந்தனுல் சொல்லத் தரமா இ

அநுபல்லவி.

மந்தஹாஸி கெம்பீரி மனோஹர சுகுமாரி
சந்தர வதனியாளை சல்லாபிப்போ மிவ்வேளை இ

சரணம்.

அன்ன நடையைக் கண்டு
ஆவலு மையல் கொண்டு
இன்றுவே ஞன் தொண்டு
இளகுவே னிவ்வேளை பெண்ணே
சொர்ண வஜீகரி யாளை
தென்புட னணைந்திவ் வேளை
அன்றில் போற் காளை
அணிவேன் பற்றியே தோளை இ

## திருநெல்வேலி

# மகாலிங்கையர் பாடியது.

பிளேட் நெ. 1681 நாமார்க்கும் குடியல்லோம் 1-2-பாகம்.

திருத்தாண்டகம்.

இராகம்-ஹரிகாம்போதி.

1-ம் பாகம்.

நாமார்க்கும் குடியல்லோம்
நமனை யஞ்சோம் நடகத்தி லிடப்படோம்
நடலை யில்லோம்

ஏமாப்போம் பிணியறியோம்
பணிவோ மல்லோ
மின்பமே யென்னாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத்
தன்மையான சங்கரனை
சங்கவெனி குழையோர் காதிற்
கோமார்க்கே நாமென்று
மீளா வாளாய்க் கோவிலமர்ச் சேவடி
பிணையே குறுகினோமே.

2-ம் பாகம்.

ஈசனை யெவ்வுலகுக்கு மிறைவன் றன்னை
இமையவர்தம் பெருமானை
பெரியா மிக்க
தேசனை செம்மேனி வெண்ணீற்றானைச்
சிலம்பறையின் பொற்பாவை
நலஞ்செய் கின்ற
நேசனை நித்தமு நினையப்பெற்றோம்
நின்றுண்பா ரெம்மை
நினையப் பெற்றோம்
வாசக மெல்லா
மறந்தோ மன்றே வந்தீரா
மன்னவனுவரன் றாரே.

# K. T. நடராஜா பாடியது.

பிளேட் நெ, 2252 { தேவா தேவா / நித்த முன்னை

இராகம்-ஆயனாதா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தேவா தேவா ஸ்ரீ வைகுந்தா
சின்மயானந்தா முகுந்தா (தே)

அநுபல்லவி.

ஆவலானேன் கதி நானே
அனுகூலா வா வா வா வா (தே)

சரணம்.

ஜனகராஜன் புத்ரி நாதா
சேவைதா தருண மிதுதான்
அனந்தன் மீது பள்ளிகொண்ட
ஆதியே நீ வா வா வா வா தே
ஏழை யென்மேல் என்ன கோபம்
வேண்டினேன் ஏனோ பாபம்
ஊழ்வினையின் தோஷ மீதே
ஓடிவந்து கார் கார் கார் கார் தே

இராகம்-அச்சாமேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

நித்தமுன்னை மறவேனே
நீலமேக ரூபனே
ரூபனே மேக ரூபனே நி

அநுபல்லவி.

சத்தியம் உண்மையிது
சங்கு சக்ரா நம்பினேன்
நம்பினேன் வெம்பினேன்
அம்புவியில் நான் நி

சரணம்.

ஆதிமத்யாந்த ரஹிதா
அச்சுதா லக்ஷ்மீ சஹிதா
ஆதரி மாதவா
சோதியாதே நி
அஷ்டாக்ஷரப் பொருளே
ஆனந்தமா யருளே
அண்டினேன் விண்டுவே புண்டரீகனே நி

ஆரியகான

## K. S. செல்லப்ப அய்யர்

பாடியது.

கோபாலஸோ தரிகௌரி அம்பா
பாப்பார கிருதா பரமேஸ்வரி அம்பா
நீ பதமுலனு நம்மிதினி
நிகில லோக ஜனனி ஸ்ரீ மீனாக்ஷி யம்பா கோ

நின்மாயமோ யேசாமளீ அம்பா
நீ நடபைரவி பரிபூரணி அம்பா
ஸ்ரீ கௌரி கேசரூபா சோமளி அம்பா சோ

## தனிப்பாட்டு.

# ச. சு. சங்கரலிங்க கவிராயர்

## பா டி ய து.

### ஷண்முகா ஏழை என்மேல் என்ற வர்னமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பக்திக்கோர் வித்வஞான பழனியப்பா
பாலகன்மீது வர்மமேது புகல்வாயெனப்பா ப

அநுபல்லவி சந்தத்தொடர்.

பற்றும்பவ வினையது
முற்றும் பொடிபடவரு பழனியப்பா ப
பளபளவென வொளிதரு
மயின்மிசை நடமிடவரு பழனியப்பா ப

பகாருணகிரியின் பட்சத்தே
திருப்புகழை கற்பித்தே
விருப்பமொடு ரட்சித்தே
மருத்வமிகு பழனியப்பா ப

சரணம்.

தித்திக்கும் பஞ்சாமிர்தமே
தேனும் பாலும் பாகுஞ்சேரும் திருவடிக்கனுதினமே
தியான நிஷ்டை தானளித்து
ஆணவத்தையே விலக்கிடாய்
சிவசமயத்தொளிர் முருகனெனப்புகழ் தேசிகனே
சித்திக்கும் பிரம்மானந்தமே
செந்திப்பதிவரு செல்லப்பா சங்கரலிங்கஞ்
சந்தத்தமிழது சொல்லப்பா சந்ததமொந்தன்
சொந்தத்துணையென நில்லப்பா சங்கமுழங்கும் ப

நான்காம்பாகம் முற்றிற்று.